# பொதுக்காலத்தின் பதிமூன்றாம் ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**1அர 19:16,19-21, கலா 5:1,13-18, லூக்கா 9: 51-62**

## திருப்பலி முன்னுரை:

அழைக்கப்பட்டவர்களே, பொதுக்காலத்தின் பதிமூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். இயேசுவின் அழைப்பை காலம் தாழ்த்தாமல் ஏற்க இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாத மக்களை, அவர் சினம் கொண்டு அழிப்பதில்லை என்றாலும் அவரை நம் இல்லத்தில் வரவேற்பது நம் கடமை. தலை சாய்க்கக்கூட இடமில்லாதவராக இயேசு இந்த உலகில் வாழ்ந்தார். தன்னைப் பின் பற்ற விரும்பும் ஒவ்வொருவரும், உலகப்பற்று இல்லாதவர்களாய் இருக்க வேண்டுமென ஆண்டவர் விரும்புகிறார். திரும்பிப் பார்க்காமல் கிறிஸ்துவைப் பின்தொடர்பவரே இறையாட்சிக்கு உட்பட முடியும் என்பதை உணர அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் விருப்பத்துக்கு நம்மையே அர்ப்பணித்து வாழ வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. பணியாற்ற அழைப்பவராம் இறைவா,**

உமது பணிக்காக நீர் தேர்ந்துகொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாய் வாழ்ந்து, உமது திருவுளத்தை இம்மண்ணில் நிறைவேற்ற துணை நிற்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. என்றென்றும் மாறாத பேரன்பு உடையவரான தந்தையே!**

நாங்கள் ஒவ்வொருவரும் கிறீஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட அழைத்தலை ஆழமாக உணர்ந்து திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைக்கவும்: தூயஆவியின் தூண்டுதலுக்கு ஏற்பவாழவும், தீமைகளை எம் வாழ்விலிருந்து அகற்றி நாங்கள் பெற்றுக் கொண்ட அழைப்பிற்கேற்ப பரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. திக்கற்றவர் கூவியழைக்க, அவர்கள் குரலைக் கேட்கும் தந்தையே!**

இன்று அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காகவும் கவலை, நோய், துன்பம் போன்றவற்றிலிருந்தும் விடுதலை பெறத்தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுதலைப் பெற்றுக் கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. வாழ்வு தருபவராம் இறைவா,**

உலகின் தீய வழிகாட்டுதலால் ஊனியல்பின் இச்சைகளுக்கு அடிமைகளாகி, உமது அன்பையும் பிறரது உறவையும் புறக்கணித்து வாழும் மக்கள், உமது அருளால் புதுவாழ்வு பெற உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

உலகிலிருந்து தவறுகள் அகலவும், நோய்கள் நீங்கிப் பஞ்சம் ஒழியவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும், பயணம் செய்வோர் நலமாக நாடு திரும்பவும், நோயுற்றோர் நலம் பெறவும், இறக்கின்றவர் மீட்பின் நிறைவு பெறவும் வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.